ஆதிதிராவிடர் நல ஆணையரகம்

விடுநர்
ஆணையர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–5

பெறுநர்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்

ந.க.எண். எல்2 /23692 /2021 நாள்: 23.08.2021.

அய்யா / அம்மையீர் ,

பொருள்: கல்வி – ப்ரீ மெட்ரிக் / போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை – 2019-2020 - மின்னணு தீர்வை மூலம் பராமரிப்புப்படி வழங்க இயலாத மாணாக்கர்களின் (ECS Return) சரியான வங்கி விவரம் அளிக்க கேட்டல் – தொடர்பாக.

பார்வை: தொடர்புடைய ஆவணங்கள்

-----

2019-2020 ஆம் ஆண்டிற்கான, ப்ரீ/போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட மாணாக்கர்களது வங்கி கணக்கு விவரங்கள் சரியாக சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் ECS Return காரணமாக மாணர்களுக்கான பராமரிப்புப்படி வழங்கப்படாமல் உள்ளது.

தங்களது மாவட்டத்தை பொருத்த மட்டில் 2019-2020 ஆம் ஆண்டில் , ப்ரீ மெட்ரிக் / போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டு, மாணாக்கர்களின் தவறான வங்கி கணக்கு விவரங்கள் காரணமாக மின்னணு தீர்வை மூலம் பராமரிப்புப்படி வழங்க இயலாத மாணாக்கர்களின் விவரங்கள் மற்றும் சரியான வங்கி கணக்கு விவரங்களை பூர்த்தி செய்து அனுப்புதற்கான படிவம் ஆகியவை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. அம்மாணாக்கர்களது சரியான வங்கி கணக்கு விவரங்களை அப்பள்ளி / கல்லூரிகளிடமிருந்து குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் பெற்று சரிபார்த்து , அனைத்து பள்ளி / கல்லூரிகள் விடுபடாவண்ணம், பள்ளி / கல்லூரிகள் வாரியாக adwecsreturn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக